2024 ஜூன் 29]

புதிதாகக் கட்டடங்களும், அங்கே இருக்கக்கூடிய நீதித் துறை நடுவர்களுடைய குடியிருப்புகளும் கட்டப்படுகின்றன. எனவே, நிதிநிலைமைக்கேற்றவாறு, ஒன்றிய அரசாங்கத்தினுடைய matching grant அடிப்படையிலேதான், ஆண்டுதோறும் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. அந்தவகையில் முன்னுரிமையிலே இருக்கக்கூடிய கட்டடங்களுக்கு முதல்வரிசையில் இடம் கொடுத்து, அதைத் தொடர்ந்து, எங்கெங்கெல்லாம் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் கொடுக்கப்படும். ஒட்டப்பிடாரம் பகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற அந்த நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கேட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கடிதம் கொடுத்திருக்கிறார். அதுகுறித்து உயர் நீதிமன்றத்தின் மூலமாக அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்பட்சத்தில், நிதித் துறையினுடைய ஒப்புதல் பெற்று, அதன் பிறகு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உரிய அறிவிப்பு தேவைப்படின் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

125—

இசைப் பள்ளி

***92808—திரு. A. நல்லதம்பி:**

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் இசைப் பள்ளி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தற்போது வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.

திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு வருகைதந்து, தொகுதியில் சுமார் 42,000 வாக்குகளைக் கூடுதலாகப் பெற பரப்புரை செய்த மாண்புமிகு இளைஞரணிச் செயலாளர் அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் சிலம்பாட்டம், கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், நாதஸ்வரம், தவில் கலைஞர்களும், குறிப்பாக, திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதியில் தெருக் கூத்துக் கலைஞர்களும் அதிகமாக உள்ளனர். கலை ஆர்வலர்கள் நலனைக் கருதி, திருப்பத்தூர் மாவட்டத்தின் தலைநகரில் இசைப்பள்ளி துவங்கக் கோரினேன். எனது கோரிக்கையினைக் கருத்தில்கொண்டு, கலைப் பண்பாட்டுத் துறையின் வாயிலாக ஜவஹர் மன்றம் துவக்கிட அனுமதி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துறை சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, அந்தப் பள்ளியில் தற்போது குரலிசை மாணவர்கள் 18 பேரும், பரதநாட்டியம் பயிலும் மாணவர்கள் 21 பேரும், ஓவியம் பயிலும் 17 பேரும், சிலம்பாட்டம் பயிலும் 23 பேரும் என 79 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். திருப்பத்தூரில் இசைப் பள்ளி துவங்கினால், கூடுதலான கலை ஆர்வலர்கள் பயன்பெறுவார்கள். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தற்போது கேள்வி என்ன? இசைப் பள்ளி அமைக்க மறுபரிசீலனை செய்யப்படுமா என்பது.

திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைப் பண்பாட்டுத் துறையின்கீழ்,

2024 ஜூன் 29]

தமிழ்நாட்டிலே 17 மாவட்டங்களில் அரசு இசைப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. திருப்பத்தூர் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இசைப் பள்ளி அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், திருப்பத்தூருக்கு அருகிலே, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே, மாவட்ட அரசு இசைப் பள்ளி இயங்கி வருகின்றது. எனவே, அவருடைய கோரிக்கையை எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று நிச்சயமாக துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A. நல்லதம்பி அவர்கள்.

திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைப் பண்பாட்டுத் துறையின் மண்டல அலுவலகம் திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், சேலம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சி, கோவை என 7 மண்டலங்களாகக் கலை பண்பாட்டுத் துறை செயல்பட்டு வருகிறது. எனவே, தேவையிருப்பின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிற பத்திரிகையாளர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கட்டணமில்லாப் பயணப் பேருந்து அட்டை வழங்கப்படுவதைப் போலவே, செய்தியாளர் அட்டை பெற்றுள்ள பருவ இதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் பணியாற்றும் செய்தியாளர்களுக்கும் கட்டணமில்லாப் பயணப் பேருந்து அட்டை வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கீகார அட்டை பெற்றுள்ள பத்திரிகையாளர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கட்டணமில்லாப் பயணப் பேருந்து அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, செய்தியாளர் அட்டை பெற்றுள்ள பருவ இதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்கும் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். ஏற்கெனவே தலைமையிடத்திலிருந்து 457 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகளின்பேரில் 2,917 பத்திரிகையாளர்களுக்கும் என மொத்தம் 3,374 பேருக்கு கட்டணமில்லாப் பயணப் பேருந்து அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, பருவ இதழ் பத்திரிகையாளர்களுக்குக் கட்டணமில்லாப் பயணப் பேருந்து அட்டை வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகளவில் தமிழுக்கு எங்கும் கோயில் இல்லை. இருப்பினும், காரைக்குடியில் தமிழ்த் தாய் கோயிலுக்கு மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1975 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டு, 1993 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதற்குப்பிறகு பராமரிப்பு இல்லாமலும், சுற்றுமண்டபம் இல்லாமலும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அதற்குச் சுற்றுமண்டபம் அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அதேபோன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லத் தயாராக இருக்கின்றேன். எனது பகுதியில் புதுவேலியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது குறித்த அறிவிப்பை இன்று வெளியிடுவார்கள் என்ற நம்பிக்கையோடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

2024 ஜூன் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு அலுவலர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அதுகுறித்து ஆய்வு செய்து, எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. இளங்கோ அவர்கள்.*

திரு. ரா. இளங்கோ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி, மக்கள் தொடர்புத் துறையில் பணிபுரியும் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள்மூலம் திராவிட மாடல் அரசின் நலத் திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் கருத்துக் கேட்கும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், பத்திரிகையாளர்களையும் அழைத்துச் சென்று திட்டங்களால் பயனடைந்து வரக்கூடிய பொதுமக்களிடத்தில் கருத்து கேட்டு, அந்த விவரங்களை அரசுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில், 'நிறைந்தது மனம்' என தலைப்பிடப்பெற்றிருக்கிறது. ஆகஸ்ட் மாதத்திலிருந்து அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. வெங்கடேசன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*